வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 2021

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.யுவராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி | வயது | : | |
| கிராமம் | : | ஆலுத்துபாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கார் ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 10.03.2018 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் என் ஒர்க் ஷாப்பில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது கோவை - பல்லடம் ரோட்டில் TVS பெரிய இருசக்கர வாகனத்தை ஒரு நபர் ஓட்டிவந்து நெல்லை பேக்கரி அருகே வலது பக்கம் திரும்புவதற்காக கையை காண்பித்து திரும்பினார் அப்போது அவருக்கு பின்னால் வந்த chervolet கார் வந்து அவர் மீது மோதியது உடனே நானும் பக்கம் இருந்தவர்கள் வந்து பார்த்தோம். இருசக்கர வாகனத்தில் வந்தவருக்கு சிறிய காயக்ஙள் இருந்தது , பின்னால் உட்காருந்து வந்த நபருக்கு தலையில் அடிப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னர் அதில்ஒரு நபர் இருந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. எட்டு வருடங்களானதால் காரை ஓட்டி வந்தவரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) போலீசார் என்னை விசாரித்தாக முதல் விசாரிணையில் சொல்லயுள்ளது போல் அன்றே என்னை விசாரிக்கவில்லை என்றால் என்னை அடுத்த நாள் விசாரித்தார்கள். இரு சக்கர வாகனத்தில் மற்றும் காரில் வந்தவர்கள் பெயர்கள் எனக்கு போலீசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். மற்றப்படி காரில் வந்தவர்களின் அடையாளம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணையில் வலது பக்கம் திரும்பினார்கள் என்ற விவரம் எனக்கு சத்தம் கேட்டுதான் நான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 16:51:13 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 2021

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தினேஷ்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | காளிவேலம்பட்டி | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கார் ஒர்க் ஷாப்பில் மெக்கானிக்காக இருகிறேன். கடந்த 11.03.2018 ஆம் தேதி காலை ஒரு 7.30 மணியளவில் அதற்கு முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் ராஜேந்திரன் எனபவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.அந்த பார்வை மகஜர் **ஆ.த.சா.அ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) நான் கையொப்பம் செய்தது கையால் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் என் முன்னிலையில் எங்கும் பிரிண்ட் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னை விசாரணை செய்து பிறகு காவல் நிலையம் சென்று பிரிண்ட் எடுக்கப்பட்டதா என்றால் என்னை விசாரித்தார் கள் எங்கு சென்று பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு

தெரியாது. நான் மொத்தம் கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.01.27 16:51:25 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.